PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
8148231942 / 8144337349
11, South Karumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jnrgroup.org

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் சென்னை, 26 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 137

"'சிக்னல் அட் 11.30' திரைப்படம் ரசிகர்களுக்கு வித்தியாசமான திரையரங்க அனுபவத்தைத் தரும்!"- நடிகை பவ்யா திரிகா



சென்னை – 26 நவம்பர், 2026 தமிழ் திரையுலகில் ஒவ்வொரு படத்திலும் வித்தியாசமான கதாபாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து நடிப்பதில் ஆர்வம் காட்டி வருபவர் நடிகை பவ்யா திரிகா முதலில் என்னை இந்தப் படத்துடன் இணைத்தது. பெண் இயக்குநருடன் பணிபுரிய போகிறோம் என்பதும், 'சிக்னல் அட் 11.30' படத்தின் கதைக்களமும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. பெண் இயக்குநர்கள் அதிக அளவில் திரைப்படங்களை இயக்க வேண்டும். ஒரு படத்தைப் பற்றிய விவாதம் நடக்கும்போது, அதை இயக்கியவர் பெண் என்பதைக் கடந்து, அவரது படைப்பைப் பற்றியதாகவே இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். படப்பிடிப்புத் தளத்தில் மலர் மேடம் அனைத்து கலைஞர்களிடமும் மிகவும் அன்பாகவும், அக்கறையுடனும் நடந்துகொண்டார். அதனால் படத்தில் பணிபுரிந்த அனைவரும் ஒத்துழைப்போடு வேலை பார்த்தோம். ஜெயப்பிரகாஷ் சார் மிகவும் எளிமையானவர், அனைவரிடமும் அன்பாகப் பழகக்கூடியவர். அவருடன் இணைந்து நடித்தது மகிழ்ச்சியான அனுபவம். என்னுடைய முதல் படத்திலேயே சந்தோஷ் பிரதாப்புடன் இணைந்து பணியாற்றியிருக்கிறேன். மீண்டும் அவருடன் இந்தப் படத்தில் இணைந்தது மகிழ்ச்சி அளித்தது. புஜிதாவும் மிகவும் இனிமையானவர். ஏற்கெனவே அறிமுகமானவர்களுடன் இணைந்து பணியாற்றியது போன்ற உணர்வு படப்பிடிப்புத் தளத்தில் இருந்ததால், அனைவருக்குள்ளும் நல்ல புரிதல் ஏற்பட்டது. அந்த நேர்மறையான சூழல் படப்பிடிப்பு முழுவதும் தொடர்ந்தது" என்றார். மேலும், இப்படத்தில் இடம்பெற்ற சில காட்சிகள் இதுவரை தனக்கு கிடைத்திராத புதிய அனுபவத்தைக் கொடுத்ததாகக் கூறும் பவ்யா திரிகா, சக நடிகர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களின் முழு ஒத்துழைப்பும் தனக்கு பெரிதும் உதவியதாகத் தெரிவித்துள்ளார். இறுதியாக, "ரசிகர்கள் திரையரங்கில் பார்த்து ரசிக்க வேண்டிய திரைப்படம் 'சிக்னல் அட் 11.30'. இதுவரை இல்லாத புதிய அனுபவத்தை இந்தப் படம் அவர்களுக்குக் கொடுக்கும்" என்றார். மலர்விழி நடேசன் இயக்கியுள்ள 'சிக்னல் அட் 11.30' திரைப்படத்தில் சந்தோஷ் பிரதாப், பவ்யா திரிகா, புஜிதா பொன்னடா, ஜெயப்பிரகாஷ், முனிஷ்காந்த் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். அலர் ஸ்டுடியோஸ் சார்பில் மலர்விழி நடேசன் மற்றும் டாக்டர் ஷிவானி சுப்பிரமணி இப்படத்தை வழங்குகின்றனர். டி. இமான் இசையமைத்துள்ள இப்படத்திற்கு ராஜா பட்டாச்சார்ஜி ஒளிப்பதிவு செய்துள்ளார். ஆர். கலைவாணன் படத்தொகுப்புப் பணிகளையும், ஷெரிப் நடன அமைப்புப் பணிகளையும் மேற்கொண்டுள்ளனர்.